முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1256

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.03.2023**, புதன்கிழமை

1. அறமெனும் சக்திமிகு அரங்கா வாழ்க
   அருட்தயவு காட்டுகின்ற தேசிகா வாழ்க
   வரம் தரும் வள்ளலே வாழ்கவாழ்க
   வையகத்தை வாழவைக்க வந்த தவசியே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 24 ம் நாள், 08.03.2023, புதன்கிழமை)
   ஊழ்போக்க வந்த மகாஞானி நீ
   உலகை மாற்றவந்த மாதவசி நீ
3. தவசி உன் அறமும் தர்மமும்
   தரணியை மீட்பது உறுதிஉறுதி
   தவசிநீ தருகின்ற வேதமும் ஞானமும்
   தரணியோரை ஞானிகளாக்குவது உறுதிஉறுதி
4. உறுதி தந்து அரங்கன் உன் சக்திக்குள் யான்
   உயர்வாக கலந்து இணைந்து அற்புதம் நடத்துகின்றேன்
   நடத்தவே அரங்கன் திருவடி பற்றி வந்தவர்களெல்லாம்
   ஞானிகளாவது  உறுதி உறுதி
5. இடர்களையெல்லாம் வென்று அவர்கள்
   இந்த உலகை காக்கும் சக்தியாக மாறுவதும் உறுதிஉறுதி
   உறுதி தந்து அரங்கனுள் இந்த ஆக்கத்தை உயர்வாக ஆறுமுகன் யான் நடத்தி வர
   கருதிவந்து உலகோர் அரங்கன்பால் கண்டுரைப்பேன் சரணாகதி கொண்டு
6. கொண்டுமே அரங்கனே முருகனே
   குருபரனே என வணங்கிவர
   தொண்டுவழியே உலகோர் தேசிகன் உன்னால் ஞானம் பெற்று
   இந்த உலகில் அற்புதம் நடத்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–